S.T.C. 439 / 21
P.W.1
ஹரிஹரகுமார்
Date 20.02.2023

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

(எதிரி ஆஜர்)

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

**1)** நான் சுப்பையா கந்தசாமி அக்கவுண்டிங் சர்வீஸ் என்ற பெயரில் நான் எத்தனை வருடமாக தொழில் செய்து வருகிறேன் என்றால் 2016 ம்ஆண்டிலிருந்து தொழில் செய்து வருகிறேன். எதிரி ஸ்ரீராம் இன்டஸ்ட்ரீஸ் என்ற பெயரில் நான் எத்தனை வருடமாக தொழில் செய்து வருகிறார் என்றால் சரியாக தெரியாது. எத்தனை வருடமாக நான் எதிரி நிறுவனத்திற்கு கணக்கு வழக்கு பார்த்து வருகிறேன் என்றால் 2018 ம் ஆண்டிலிருந்து பார்த்து வருகிறேன். கணக்கு வழக்குகள் அனைத்தும் ஆன்லைன் மூலமாக தான்நடக்கும் என்றால் சரிதான். நான் வருமான வரி கணக்கு, ஜிஎஸ்டி அனைத்தும் எதிரி நிறுவனத்திற்கு தாக்கல் செய்வேன் என்றால் சரிதான்.

2) எனது ஐபி அட்ரஸ் மூலமாக தான் ஆன்லைனில் கணக்கு வழக்குகள் தாக்கல் செய்யமுடியும் என்றால் சரிதான். எதிரி நிறுவனத்திற்கு தாக்கல் செய்த கணக்கு வழக்குகளை எனது கணினியில் வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். அதை பார்த்தால் எதிரி நிறுவனத்திற்கு கணக்கு வழக்குகளை தாக்கல் செய்துள்ளேனா என்று தெரியவரும் என்றால் சரிதான். அதனால் தான் எதிரியை தொழில்முறையில் நன்கு தெரியும் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.எதிரியை தொழில்ரீதியாகவும் தெரியும் மேலும் அவர் என் பக்கத்து வீட்டு நபர் ஆவார். எந்த வருடம் என் பக்கத்து வீட்டில் எதிரி இருந்தார் 2018 லிருந்து 2021 ம் ஆண்டு வரை இருந்தார். 2021 ம் ஆண்டு வரை எதிரி வாடகை வீட்டில் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் ராமசாமி நகர், சித்துராஜபுரத்தில் குடியிருந்து வருகிறேன்.

3) எதிரி நிறுவனத்தின் 2018 – 2019 ம் ஆண்டிற்குரிய லாப கணக்குகள் சரியாக தெரியுமா என்றால் சரியாக தெரியாது. பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதி நான் எதிரி நிறுவனத்திற்கு கணக்கு தாக்கல் செய்வதற்கு முன்பா அல்லது பின்பா

என்றால் கணக்கு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு கொடுத்தேன். ( பின்னர் சாட்சி பின்பு கொடுத்தேன் என்று கூறினார்) எதிரி நிறுவனத்தின் கணக்கை தயார் செய்து கொண்டிருக்கும் போது பணம் கொடுத்தாக எடுத்துக்கொள்ளலாமா என்றால் எடுத்துக்கொள்ளலாம். கணக்கு பார்த்து கொண்டிருக்கும் போது எதிரி நிறுவனத்திற்கு எவ்வளவு லாபம் பெறப்பட்டது என்று தெரியுமா என்றால் நியாபகமில்லை. என் ஐபி அட்ரஸ் என்னவென்றால் சரியாக தெரியவில்லை., நீதிமன்றத்தில் ஐபி அட்ரஸ் குறித்து மெமோ தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். நான் எந்த கால கட்டத்திலும் எதிரி நிறுவனத்திற்காக கணக்கு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரியானவர் எந்த கால கட்டத்திலும் தொழில் ரீதியாக எனக்கு பழக்கமானவர் இல்லை என்றால் சரியல்ல. அதை மறைப்பதற்காக தான் தற்போது எதிரி என் வீட்டின் பக்கத்து வீட்டுக்காரர் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4) லாக்டவுண் தேதி தெரியுமா என்றால் 24.3.2020 ம் தேதி தெரியும். முழுவதுமாக ஊரடங்கு தொடர்ச்சியாக 31.5.2020 ம் தேதி வரை நடந்தது என்றால் சரிதான். 2020 கால கட்டத்தில் எத்தனை பேருக்கு கணக்கு வழக்குகள் பார்த்தேன் என்றால் சுமார் 100 பேர்கள் இருக்கும். நான் கணக்கு வழக்குகள் பராமரித்து வருகிறேனா என்றால் பராமரித்து வருகிறேன். கணக்கு வழக்குகளை பார்த்தால் எந்த தேதியில் எவ்வளவு ரூபாய் எதிரிக்கு கொடுக்கப்பட்டதுஎன்று தெரியும் என்றால் சரிதான். ஐடி ரிட்டன் தாக்கல் செய்யும் போது நிலுவைத் தொகை காட்டி உள்ளேனா என்றால் காட்டவில்லை. நான் சொன்ன தேதியில் எதிரிக்கு ரூ6 லட்சம் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் எதிரிக்கு கொடுத்த பணம் சம்பந்தமாக எந்த வித ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஊரடங்கு காலத்தில் எப்படி ரூபாய் ஏற்பாடு செய்தேன் என்றால் அதற்கு முன்னே என்னிடம் இருந்தது. ஊரடங்கு முன்பு எவ்வளவு காலமாக பணம் வைத்திருந்தேன் என்றால் ஒரு மாதத்திற்கு முன்பு வசூல் செய்த பணம் வைத்திருந்தேன்.

5) எனக்கு ரூ6 லட்சம் கொடுக்க வசதி இல்லை என்றால் என்னுடைய பணம் ரூ3 லட்சமும் என் நண்பர் பணம் ரூ3 லட்சமும் கொடுத்தேன். யார் அந்த நண்பர் என்றால் தாயில்பட்டியை சேர்ந்த ராமமூர்த்தி ஆவார். ராமமூர்த்தியிடம் எப்போது பணம் வாங்கினேன் என்றால் 2020 ஏப்ரல் மாதத்தில் வாங்கினேன், தேதி நியாபகமில்லை. ராமமூர்த்தியிடம் வட்டிக்கு வாங்கினேனா என்றால் ஒன்றரை

பைசா வட்டிக்கு வாங்கினேன். ராமமூர்த்தியை விசாரித்தால் உண்மையில் எந்த தேதியில் பணம் வாங்கினேன் என்பது தெரியவரும் என்றால் தெரியவரும். ராமமூர்த்தியிடம் பணம் வாங்கியதாக என் புகாரிலும், நிருபண வாக்குமூலத்திலும், அறிவிப்பிலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் பணம்கொடுக்கும் போது அவரிடமிருந்து எந்த ஆவணமும் பெறவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில் எதிரியிடமிருந்து பணம் கேட்க தொடங்கினேன் என்றால் பணம் கொடுத்த தேதியிலிருந்தே கேட்டு கொண்டிருக்கிறேன். பணம் எவ்வளவு கொடுக்க வேண்டும், வட்டி எவ்வளவு கொடுக்க வேண்டும் என்று எங்கு வைத்து பேசப்பட்டது என்றால் என் வீட்டில் வைத்து பேசப்பட்டது. அன்றைய தேதியில் எதிரியால் காசோலை நிரப்பப்பட்டு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரிதான்.

6)2019 ம் கால கட்டத்தில் ரூ1 லட்சம் என்னிடமிருந்து எதிரியால் பெறப்பட்டு அதற்கு ஆதரவாக கொடுத்த காசோலை எண்ணால்(நம்பர்) மட்டும் தொகை நிரப்பப்பட்டு எழுதப்பட்டது என்றால் சரியல்ல. காசோலையில் ரூ1 லட்சம் என்று எழுதியதை ரூ7 லட்சம் என்று திருத்தி காசோலையை வசூலுக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. காசோலை திருத்தப்பட்டதா என்பதுகுறித்து நிபுணரிடம் அனுப்புவதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் ஆட்சேபணை இல்லை. எந்த கால கட்டத்திலும் எதிரி என்னிடம் ரூ6 லட்சம் பெறுவதற்கு அவருக்கு தேவை இல்லை என்றால் சரியல்ல.